OS. 39/2014

நாள். 17.10.2022.

வா.சா. 1 – வீரபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு செய்வதற்கு வழக்கறிஞரிடம் நான் தான் விவரம் சொன்னேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்ற விவரம் எனக்கு நன்றாக தெரியும். O.S.No.56/1970 வழக்கானது ஒத்தியை மீட்பதற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க யார் மனுதாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் முத்துராமு அனுபவம் செய்யவில்லை. முத்துராமு எங்களுக்காக வழக்கு போட்டார். எங்கள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. என்னுடைய அனுபவத்தில் இருப்பதை காட்டக்கூடிய பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா இருக்கிறது. ஆனால் தாக்கல் செய்யவில்லை. 12.05.1944 தேதியில் முத்து வெயிலு கிரயம் வாங்கிய கிரய பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த விவரம் தெரியாது. வக்கீலுக்குத்தான் தெரியும். பிராது 5 இலக்க சொத்துக்களின் சர்வே எண், பட்டா எண் தெரியும். 5 சொத்துக்களுக்கும் சேர்த்து பட்டா எண். 1580. 25.03.1960 உயில் பத்திரத்தில் காண்பிக்கப்பட்ட சொத்துக்களும் 12.05.1944 தேதியிட்ட முத்து வெயிலு கிரயம் வாங்கிய பத்திரத்தில் உள்ள சொத்துக்களும் வேறு வேறு என்றால் சரிதான். முத்து வெயிலு 1966ல் இறந்துவிட்டார். முத்து ராமு 1986ல் இறந்தார். முத்து ராமு இறக்கும்போது எனக்கு வயது 39 அல்லது 40 இருக்கும். 13.09.1977 ல் முத்துராமு வெள்ளைச்சாமிக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு 30 வயதிற்கு மேலே தான் தெரியவந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னாலேயே கிரயம் கொடுத்த விவரங்கள் நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)